සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Science

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 6	விஞ்ஞானம்

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.
- மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.
- ஒரு வினாவிற்கு இண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

01. வைக்கோல் ஊறவைத்த நீரிலிருந்து சில துளிகளை நுணுக்குக் காட்டியால் அவதானித்த போது அதில் படத்தில் உள்ளது போல் நுண்ணங்கி கூட்டம் ஒன்று காணமுடிந்தது இந்த நுண்ணங்கி வகை எது?



1. கிளமிடமோனசு
2. இயூக்கிளீனா
3. பரமேசியம்
4. அமீபா


02. மழைவீழ்ச்சியை அளவிடும் அலகு எது?
1. நனோ மீற்றர்
2.. மில்லி மீற்றர்
3. சென்றி மீற்றர்
4. மீற்றர்

03. மண்சரிவு குறைவாக நிகழக்கூடிய மாவட்டம்.
1. பதுளை
2. கேகாலை
3. இரத்தினபுரி
4. புத்தளம்

04. மின்னோட்டம் பாயும் மின்சுற்று ஒன்றில் மின்பாய்வதற்கு எதிராக ஏற்படும் தடை எவ்வாறு அழைக்கப்படும்?
1. அழுத்தவேறுபாடு
2. வெப்பம்
3. தடை
4. அமுக்கம்

05. "பலூன்களால் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் நன்பகலாகும் போது பலூன்கள் வெடிக்கத் தொடங்கின" அதற்கு காரணம்.
1. திண்மங்கள் விரிவடைவது
2. வாயு விரிவடைவது
3. திரவ விரிவு
4. இவை எதுவுமல்ல

06. புவி மேற்பரப்பில் நீர் காணப்படும் விதத்தை அருகிலுள்ள படம் காட்டுகின்றது. அதில் A, B, C என்பன முறையே.



1. சமுத்திரம் மற்றும் கடல் நீர், பயன்படுத்தக்கூடிய நீர், திண்ம நிலையிற் காணப்படும் நீர்.
2. பயன்படுத்தக் கூடிய நீர், சமுத்திரம் மற்றும் கடல் நீர், திண்ம நிலையிற் காணப்படும் நீர்.
3. திண்ம நிலையிற் காணப்படும் நீர், சமுத்திரம் மற்றும் கடல் நீர், பயன்படுத்தக் கூடிய நீர்.
4. சமுத்திரம் மற்றும் கடல் நீர் திண்ம நிலையிற் காணப்படும் நீர், பயன்படுத்தக் கூடிய நீர்.


Past Papers Wiki

07. நீரின் நிலை மாற்றங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அதில் சரியான விடை எது?
1. நீரை குளிர்த்தல் - பனிக்கட்டி
2. பனிக்கட்டியை குளிர்த்தல் - திரவ நீர்
3. பனிக்கட்டியை குளிர்த்தல் - நீராவி
4. திரவ நீரை வெப்பமாக்கல் - பனிக்கட்டி

08. ஒரு மாணவன் ஒளியைப் பற்றி முன்வைத்த கூற்றுக்கள் சில பின்வருவமாறு.
a – ஒளி எளிய நேர்கோட்டில் செல்லும்.
b – ஒளிக் கதிர்கள் பல சேர்வதால் ஒளிக்கற்றை உருவாகும்.
c – ஒளி ஊடுகடத்தாத ஊடகங்களுக்கூடாக ஒளி பயணஞ் செய்யும். இவற்றில் சரியானது.
1. a மாத்திரம்
2. b மாத்திரம்
3. a யும் b யும்
3. a, b, c என்பன.

09. கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியான கூற்றுக்கள் அடங்கிய விடையை மாத்திரம் தெரிவு செய்க.
a – அமீபா நிலையான வடிவத்தை கொண்டிராத நுண்ணங்கியாகும்.
b – விலங்குகள் சுவாசிக்கும், தாவரங்கள் சுவாசிப்பதில்லை.
c – விலங்குகள் பொதுவாக தற்போசணியாகும்.
d – கடல் அனிமனி இடப் பெயர்ச்சி அடைய முடியாத, அசைவை மாத்திரம் காட்டும் விலங்காகும்.
1. b யும் d யும்
2. a யும் d யும்
3. a, b, c என்பன
4. a யும் b யும்

10. அருகிலுள்ள உருவத்தால் காட்டப்படுவது.
1. எளிய ஈரமானி
2. வளர்ச்சிமானி
3. காற்று வேகமானி
4. உறிஞ்சன்மானி



11. கீழே தரப்பட்டுள்ள கூற்றும் அதற்கான சரியான காரணத்தையும் காட்டும் விடையை தெரிவு செய்க.
கூற்று – மீன் தொட்டிகள் கண்ணாடியால் ஆக்கப்பட்டிருப்பதால் அதனுள்ளே உள்ள மீன்களை வெளியிலிருந்து அவதானிக்க முடியும்.
காரணம் - கண்ணாடி ஒளி ஊடுகாட்டும் பொருளாகும்.
1. கூற்றும், காரணமும் பிழையாகும்.
2. கூற்று உண்மை, ஆனால் காரணம் பிழை.
3. கூற்று பிழை, ஆனால் காரணம் சரியானது
4. கூற்று காரணம் இரண்டும் சரியானவை.


12. இலங்கையில் நீர்மின்வலு நிலையம், காற்று மின்வலு நிலையம், அனல் மின்வலு நிலையம் என்பன அமைந்திருக்கும் இடங்களை முறையே குறிப்பிடும் விடை எது?
1. கொத்மலை, புத்தளம், நுரைச்சோலை
2. புத்தளம், அம்பாந்தோட்டை, நுரைச்சோலை
3. இலக்சப்பான, ரன்தெனிகல, ரன்டெம்பே
4. விக்டோரியா, களனிதிஸ்ஸ, கொத்மலை

13. பின்வருவனவற்றில் சடப் பொருளுக்கு உதாரணமாவது.
1. வெப்பம்
2. ஒளி
3. வளி
4. ஒலி

14. வீடுகளில் சக்தி முதலாக பயன்படுத்தப்படும் பிரதான உயிர்த்திணிவு எரிபொருள் எது?
1. LP வாயு
2. விறகு
3. மண்ணெண்ணெய்
4. மின்சாரம்

15. கத்தி, கோடாரி, வாயிற்கதவுகள் (Gate) போன்றவை செய்ய இரும்பு பயன்படுத்தப்படும். இதற்காக இரும்பு கொண்டுள்ள பௌதிக இயல்பானது.
1. வலிமையும் வன்மைத் தன்மையும்
2. நொறுங்கும் தன்மை
3. மீள் தன்மை
4. கணீர் ஒலி

16. 6ஆம் தர மாணவர்கள் தயாரித்த மழைமானிகள் சில கீழே காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான மழைமானி எது?



17. கீழே தரப்பட்ட கூற்றுக்களில் பிழையான கூற்றை அல்லது கூற்றுக்களை தெரிவு செய்க.
a – வளி அமுக்கம் குறைந்துள்ள இடம் தாழமுக்கப் பிரதேசம் எனப்படும்.
b – வங்காள விரிகுடாவில் ஏற்படுகின்ற சூறாவளியே பெரும்பாலும் இலங்கைகையைத் தாக்குகின்றது.
c – வளி அமுக்கம் குறைவான பிரதேசத்திலிருந்து வளியமுக்கம் கூடிய பிரதேசத்திற்கு காற்று வீசும்.
1. a
2. b
3. c
4. a, b

18. புல் ⟶ வெட்டுக்கிளி ⟶ ஓணான் ⟶ பூனை
மேலே உள்ள உணவுச் சங்கிலியில் காணப்படும் நுகரிகளின் எண்ணிக்கை யாது?
1. ஒன்று
2. இரண்டு
3. மூன்று
4. நான்கு

19. வீட்டில் குளிர்சாதனப் பெட்டியை சரியான முறையில் பயன்படுத்துவதால் மின் விரயமாவதைத் தடுக்கலாம். பிழையான முறையில் (அதிகளவு மின் விரையமாகும் முறையில்) குளிர்சாதனப் பெட்டியை பயன்படுத்தும் சந்தர்ப்பம் எது?
1. அடிக்கடி குளிர்சாதனப் பெட்டியின் கதவை திறந்து மூடுவதை தவிர்த்தல்.
2. சூடான பொருட்களை குளிர்சாதனப் பெட்டியில் வைப்பதைத் தவிர்த்தல்.
3. சூரிய ஒளி படாத இடத்தில் குளிர்சாதனப் பெட்டியை வைத்தல்.
4. குளிர்சாதனப் பெட்டியை சுவருக்கு மிக நெருக்கமாக வைத்தல்.

20. ஒரு குறித்த காலப்பகுதியில் குறித்த பிரதேசத்தில் ஏற்கனவே கண்டறியப்பட்ட மழை வீழ்ச்சியை விட குறைந்த மழை வீழ்ச்சி ஏற்படவது வரட்சி எனப்படும். வரட்சியில் குறைவாக செல்வாக்குச் செலுத்தும் காரணி எது?
1. காடழிப்பு
2. காட்டுத் தீ ஏற்படல்
3. அதிகளவு சுவட்டு எரிபொருள் பாவனை
4. காடு வளர்த்தல்.


(2x20=40 புள்ளிகள்)

பகுதி – II

அறிவுறுத்தல்கள்.

- **முதலாம் வினா கட்டாயமானது (16 புள்ளிகள்)**
- **ஏனைய வினாக்களில் நீர் விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**
- **பகுதி – ii ன் வினாக்களுக்கு வேறு தாளில் விடை எழுதுக.**

01. A. இலங்கையின் வனச் சூழலில் காணப்படும் உணவு வலை அருகில் காட்டப்பட்டுள்ளது. இவ்வுணவு வலைப் படத்தை அடிப்படையாகக் கொண்டு கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.




i. இங்குள்ள உற்பத்தியாக்கி, தாவர உண்ணி, அனைத்துமுண்ணி, ஊண் உண்ணி என்பவற்றை ஒழுங்காக எழுதுக. (04 புள்ளிகள்)

ii. இங்குள்ள தொகுதியில் சிறுத்தை அகற்றப்பட்டால் (அழிக்கப்பட்டால்) அதிகரிக்கும் விலங்கு இனங்கள் இரண்டு எழுதுக. (02 புள்ளிகள்)

iii. மேலுள்ள உணவுவலையை அடிப்படையாகக் கொண்டு நான்கு இணைப்புகள் உள்ள உணவுச் சங்கிலி ஒன்று எழுதுக. (02 புள்ளிகள்)

B. மேலே காட்டப்பட்ட உணவு வலையில் காணப்படும் விலங்குகளின் புற இயல்புகளை கருத்திற் கொண்டு தயார் செய்த இணைக் கவர் சுட்டி கீழே தரப்பட்டுள்ளது. A, B, C, D, E, F, G, H ஆகிய இடங்களுக்கப் பொருத்தமான விடைகளை எழுதுக.



(A) ..... (B) ..... (C) ..... (D) .....

(E) ..... (F) ..... (G) ..... (H) .....


(08 புள்ளிகள்)

02. A. வானிலை அவதான நிலையமானது தினமும் வானிலைத் தகவல்களை அறிக்கைப்படுதி வைப்பதுடன் தினமும் வானிலைப் பற்றிய எதிர்வு கூறல்களை வழங்கும்.

i. வானிலை, காலநிலை என்பன யாதென விளக்குக. (02 புள்ளிகள்)

ii. வானிலைப் பறறிய தகவல்களை முன்வைப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற காரணிகள் இரண்டு எழுதுக. (02 புள்ளிகள்)

B. குருநாகல் நகரத்திற்கு ஒவ்வொரு மாதமும் கிடைத்த சராசரி மழை வீழ்ச்சியின் தரவு கீழே உள்ள வரைபில் தரப்பட்டுள்ளது.



i. குருநாகல் நகரத்திற்கு அதிக மழை வீழ்ச்சி கிடைத்த மாதம் யாது? (01 புள்ளி)

ii. அம்மழை வீழ்ச்சி எவ்வளவு? (01 புள்ளி)

iii. மிகக் குறைந்த மழைவீழ்ச்சி கிடைத்த மாதம் எது? (01 புள்ளி)

C. 2025 – 08- 28 ஆம் திகதி தரம் 6ல் கற்கும் மாணவர்கள் வெப்பமானியை பயன்படுத்தி குறித்த ஒரு நாளில் ஒரே இடத்தில் காலை 7.30 மணி முதல் நண்பகல் 1.30 மணிவரை இரண்டு மணித்தியாலயங்களுக்கு ஒரு முறை வெப்பநிலையை பதிவு செய்த அட்டவணை கீழே தரப்பட்டள்ளது.

திகதி	நேரம்	வெப்பநிலை
2025 – 08 – 28	காலை 7. 30	25°C
2025 – 08 – 28	காலை 9. 30	28°C
2025 – 08 – 28	காலை 11. 30	31°C
2025 – 08 - 28	நண்பகல் 1. 30	33°C

i. மேலுள்ள தரவுகளின்படி நாளில் அதிக வெப்பநிலை பதிவாகிய நேரம் எது? (01 புள்ளி)


ii. மேலே செயற்பாட்டின்படி எடுக்கக் கூடிய முடிவு யாது? (01 புள்ளி)

D. வானிலை மாற்றங்களால் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும்.


i. வானிலையில் ஏற்படும் எதிர்பாராத பெரும் மாற்றங்களால் ஏற்படக்கூடிய இயற்கை அனர்த்தம் ஒன்று தருக. (01 புள்ளி)

ii. வானிலை (மாற்றங்கள்) பற்றி முன்கூட்டி அறிந்திருப்பதன் முக்கியத்தவம் ஒன்று எழுதுக. (01 புள்ளி)

03. A. "வாழ்விற்கு மின்சாரம்" என்ற பாடத்தில் A, B ஆகிய மாணவர் குழுக்கள் தயார் செய்த உபகரணத் தொகுதியின் படங்கள் இரண்டு கீழே காட்டப்பட்டுள்ளது.



A குழு



B குழு

i. குழு A தயார் செய்த உபகரணத்தை எவ்வாறு அழைக்கலாம். (01 புள்ளி)

ii. அதில் பயன்படுத்தப்பட்ட x என்ற கரைசலின் பெயர் என்ன? (01 புள்ளி)

iii. தொகுதி A யில் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டாலும் அதில் ஏற்படக் கூடிய குறைப்பாடு என்ன? (01 புள்ளி)

iv. மின்குமிழ் P யிற்குப் பதிலாக அந்த இடத்தில் கல்வனோமானியை இணைக்கும் போது பெறப்படும் அவதானம் யாது? (01 புள்ளி)

B. குழு B தயார் செய்த தொகுதியில் ஆளி S யை மூடி X மற்றும் Y முனைகளுக்கு கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள பொருட்களை வைக்கும் போது மின்குமிழ் ஒளிர்கின்றதா என அவதானிக்கப்பட்டது.


i. பெறப்பட்ட அவதானங்களைக் கொண்டு அட்டவணையின் இடைவெளிகளை நிரப்புக.

X மற்றும் Y முனைகள் இடையே வைக்கப்பட்ட பொருள்	மனி குமிழ் ஒளிர்ந்தது / மனிகுமிழ் ஒளிரவில்லை
a. காபன் கோல்	……..
b. இறப்பர் பட்டி	……..
c. இரும்பாணி	……..
d. அழிஇறப்பர்	……..

ii. பெறப்பட்ட அவதானங்களின்படி a, b, c, d என்பவற்றை பின்வருமாறு வகைப்படுத்துக.

a. கடத்தி b. காவலி (02 புள்ளிகள்)

iii. கீழே காட்டப்பட்ட மின்சுற்றில் குறியீடுகளால் காட்டப்பட்ட உபகரணங்களை இனங்கண்டு அவற்றின் பெயர்களை எழுதுக. (03 புள்ளிகள்)



04. அடைப்பினுள் தரப்பட்ட சொற்களில் பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.

(வெப்பநிலை, சூரியன், பனிக்கட்டி, திண்ம, வாயு, விரிவு, எரிபொருள், நிறம், மீளும், நீர், நீரோடைகள்)

i. புவியில் வாழும் எமக்கு வெப்பம் மற்றும் ஒளியையும் வழங்கும் பிரதான சக்தி முதல் …….. ஆகும்.

ii. ஏதாவது பொருள் ஒன்றுக்கு வெப்பச்சக்தி வழங்கும் பொது அதன் ……. உயரும்.

iii. ……. பொருள்களுக்கு நிலையான வடிவமும், நிலையான கனவளவும் உண்டு.

iv. திரவ நிலையிலுள்ள நீரினைக் குளிர்த்தும் போது அது திண்ம நிலையிலுள்ள ……. ஆக மாறும்.

v. வெப்பத்தை வழங்கும் போது பொருள்களில் ஏற்படும் பருமனில் அதிகரிப்பானது …….. எனப்படும்.

vi. பட்டறையில் இரும்புத்துண்டை வெப்பமாக்கும் போது முதலில் சிவப்பாகவும் பின்னர் மஞ்சளாகவும் …….. மாறும்.

vii. திரவ நிலையிலுள்ள நீரை தொடர்ச்சியாக வெப்பமாக்கும் போது ……. நிலையிலுள்ள நீராவியாக மாறும்.

viii. விறகு மண்ணெண்ணெய், பெற்ரோல் ஆகிய …… எரிவதால் வெப்பத்தை பெற்றுக் கொள்ளலாம்.

ix. சமுத்திர நீரின் வெப்பநிலை மாற்றத்தால் சமுத்திரத்தினுள்ள பெரிய நதிகளைப் போன்ற ……. உருவாகும்.

x. …….. திண்ம, திரவ, வாயு ஆகிய மூன்று நிலைகளிலும் காணப்படும் பதார்தமாகும்.

xi. பலூனை ஊதும் போது அளவில் பெரிதாகுவதற்கு காரணம் பலூன் மென்சவ்வு கொண்டுள்ள …… தன்மையாகும்.

(1x11=11 புள்ளிகள்)

05. A. பெரஹராவில் காணக்கூடிய ஒலியை உருவாக்கும் முறைகளின் படங்கள் கீழே தரப்பட்டுள்ளன.




A B C

i. ஒலிமுதல் என்றால் என்ன? (01 புள்ளி)

ii. A, B, C அகிய படங்களால் காட்டப்படும் ஒலிமுதல்களின் பெயர்களையும் அவற்றால் ஒலி உருவாக்கப்படும் முறைகளையும் எழுதுக. (03 புள்ளிகள்)

B. i.ஒலியுடன் தொடர்பான அறிவைக் கொண்டு கீழே தரப்பட்ட குறிப்பில் உள்ள ஆங்கில எழுத்துடன் தொடர்பான சொல்லை அடைப்பிலிருந்து தெரிவு செய்து எழுதுக. (03 புள்ளிகள்)
(இசை ஒலி, அதிர்வு, இயற்கைஒலி, சத்தம்)



C. கீழுள்ள வாக்கியங்கள் சரியாயின் (√) அடையாளத்தையும் பிழையாயின் (X) அடையாளத்தையும் அடைப்பினுள் இடுக.


i. ஒலியானது சக்தியின் வடிவம் ஒன்றாகும். (.....)

ii. நீர் சடப் பொருளாகும். (.....)

iii. ஒளிக் கற்றையால் ஒளிக்கதிர் உருவாகும். (.....)

iv. ஒலியைக் காதினுள் செலுத்த செவிச்சோணை அவசியம். (.....)

06. A. பல்வேறு பொருட்களுக்கு ஊடாக ஒலி ஊடுகடத்தப்படுவதை அவதானிக்க செய்த பரிசோதனைத் தொகுதி கீழே காட்டப்பட்டுள்ளது.



கண்ணாடி போத்தல்


கண்ணாடி போத்தலினுள் நீருக்கும் பதிலாக வாகனங்களில் பயன்படுத்திய கழிவெண்ணெய் (Engin Oil) நிரப்பி அதனூடாக மெழுகுவர்த்தியின் சுவாலை அவதானிக்கப்பட்டது. அதனூடன் தொடர்பான அட்டவணையில் தரப்பட்ட பொருத்தமற்ற வாக்கியத்தை (பிழையான) வெட்டி விடவும்.

	பொருள்	அவதானம்	காரணம்
i.	நீர்	மெழுகுவர்த்தியின் சுவாலை தென்படும் / ஒளி தென்படும்/ தென்படாது	ஒளி ஊடுகடத்தும் / ஒளி கசிய விடும் / ஒளி ஊடு கடத்தாது
ii.	பயன்படுத்திய கழிவு எண்ணெய்	மெழுகுவர்த்தியின் சுவாலை தென்படும் / தென்படாது ஒளி தென்படும் / தென்படாது	ஒளி ஊடுகடத்தும் / ஒளி கசிய விடும் / ஒளி ஊடு கடத்தாது

PAST PAPERS WIKI

Past Papers Wiki

B. பனிக்கட்டித் துண்டு ஒன்றை தகரப் பேணி மூடியின் மேல் வைத்து மதுசார விளக்கால் வெப்பமாக்குவதை கீழே படத்தில் காட்டப்பட்டுள்ளது.



i. இங்கு பெறப்படும் அவதானம் ஒன்றை எழுதுக. (01 புள்ளி)


ii. இச் செயற்பாட்டின் போது ஏற்படும் நீரின் நிலை மாற்றங்களை அம்புக்குறிகளை பயன்படுத்திக் காட்டுக. (01 புள்ளி)

iii. நீரால் மனிதனுக்குள்ள பயன் ஒன்று எழதுக. (01 புள்ளி)

iv. நீராவியைப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் ஒன்று எழுதுக. (01 புள்ளி)

v. இயற்கையில் எமக்குக் கிடைக்கும் பயனுள்ள வளங்களில் நீர் வரையறுக்கப்பட்ட வளம் ஒன்றாகும் அது ஏன்? (01 புள்ளி)

07. A. "அன்றாட வாழ்வில் சத்தியின் பயன்பாடு" என்ற தலைப்பை கண்காட்சி ஒன்றுக்கு மாணவன் ஒருவன் வரைந்த சித்திரம் கீழே தரப்பட்டுள்ளது. அது தொடர்பாக கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.




i. படத்தில் காட்டப்பட்ட பின்வரும் சந்தர்பங்களில் பயன்படுத்தப்பட்ட சக்தி முதல்களை குறிப்பிடுக.

a. பட்டம் விடுவதற்கு
b. நீரை சூடாக்க
c. வீட்டை ஒளிர்வூட்ட
d. மோட்டார் வண்டி செலுத்த (04 புள்ளிகள்)

ii. மேலே படத்தில் பயன்படுத்தப்படும் சக்தி முதல்களில் வளிமாசடைவதில் அதிக பங்களிப்புச் செய்யும் சக்தி முதல் எது? (01 புள்ளி)

iii. மேலே படத்தில் காட்டப்படாத ஆனால், உலகில் அதிக நாடுகளில் பயன்படுத்தப்படும் சக்தி முதல் எது? (01 புள்ளி)

B. முனைவுகள் குறிக்கப்படாத A எனும் சட்டக்காந்தம் படத்தில் காட்டியது போல் ரிஜிபோம் துண்டொன்றில் வைத்து நீர்ப் பாத்திரமொன்றில் சுயாதினமாக மிதக்க விடப்பட்டது. அது படத்தில் உள்ளது போல் ஓய்வடைந்தது.




i. சட்டக்காந்தம் A யின் x மற்றும் y முனைகளின் பெயர்களை எழுதுக.

x .....

y ..... (02 புள்ளிகள்)

ii. மேலே குறிப்பிட்ட சட்டக் காந்தத்தை முனைகள் தெரியாத வேறு காந்தம் ஒன்றுக்கு அருகில் கொண்டு செல்லும் போது அது படத்திலுள்ளது கவரப்பட்டது. அதன்படி கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.



a. காந்தம் B யின் P மற்றும் Q முனைகளை இனங்கண்க.

P -

Q - (02 புள்ளிகள்)

b. காந்தம் B யின் பெயரை எழுதுக. (01 புள்ளி)

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank